கொ.மு.சுட்டெண்

2021 திசெம்பர்

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு மற்றும் பணிகள் என்பனவற்றின் பெறுபேறுகள்

முக்கிய விடயங்கள்:


**தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிற்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2021 திசெம்பரில் விரிவடைந்தன**

**தயாரிப்பு கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**58.1**

2021 நவெம்பருடன் ஒப்பிடுகையில் 3.8 சுட்டெண் புள்ளிகள் கொண்ட வீழ்ச்சி

**தயாரிப்பு நடவடிக்கைகள், மாதத்திற்கு மாதம் அடிப்படையில் 2021 திசெம்பரில் விரிவடைதலை நிலைநிறுத்தி 58.1 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்துள்ளது என்பதனை தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் எடுத்துக்காட்டுகின்றது.** புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்திகளில் ஏற்பட்ட விரிவடைதல் இதற்கு பிரதான காரணமாக அமைந்தது. மாத காலப்பகுதியில் தொழில்நிலை தவிர்ந்த அனைத்து துணைச் சுட்டெண்களும் அதிகரித்தன.

புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி என்பவற்றில் விரிவடைதலானது உணவு மற்றும் குடிபானத் தயாரித்தல் துறையில் ஏற்பட்ட பருவகால கேள்வியினால் பிரதானமாகத் தூண்டப்பட்டிருந்தது. புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் தயாரிப்பு துறையில் புதிய கட்டளைகளும் உற்பத்தியும் மெதுவான வேகத்திலேனும் மேம்பாடொன்றினைக் காண்பித்தன. எனினும், தொழில்நிலை துணைச் சுட்டெண்ணானது 2021 நவெம்பருடன் ஒப்பிடுகையில் திசெம்பரில் வீழ்ச்சியடைந்தது. புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தியில் அதிகரிப்புகளுடன் ஒப்பிடுகையில் கொள்வனவுகளின் இருப்பு மெதுவான வேகத்தில் அதிகரித்தது. சீனப் புத்தாண்டு விடுமுறை காலத்தை எதிர்பார்த்து கையிருப்புகளைக் கணிசமாக அதிகரித்துக்கொள்வதற்கு தாம் விரும்பிய போதிலும், இறக்குமதி தொடர்புபட்ட பிரச்சினைகள் காரணமாக ஓரளவு மாத்திரமே அவர்கள் அவ்வாறு செய்யக்கூடியதாகயிருந்ததென பல பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர்.




மூலம்: இலங்கை மத்திய வங்கி

| மாறி | நவெ | திசெ | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **61.9** | **61.9** | **-** | **அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்** |
| | | கொ.மு.சு. துணைச்சுட்டெண்கள் | | |
| புதிய கட்டளைகள் | 67.2 | 65.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 64.0 | 58.0 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 52.7 | 48.0 | - | அதிகரிக்கரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| கொள்வனவுகளின் இருப்பு | 64.0 | 52.0 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 58.6 | 61.1 | + | நீட்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அதேவேளை நிரம்பலர் விநியோக நேரம், 2021 திசெம்பரில் உயர்வான வேகத்தில் வீழ்ச்சியடைந்தது. துறைமுக நெரிசல்கள் காரணமான தாமதங்கள், சீனப் புதுவருட விடுமுறைகளை எதிர்பார்த்து கொள்வனவுக் கட்டளைகளின் அதிகரிப்பு, உள்நாட்டு மூலப்பொருட்கள் பற்றாக்குறை என்பன நிரம்பலர் நேரம் நீட்சியடைவதற்கான முக்கிய காரணங்கள் மத்தியில் காணப்பட்டன.

உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார நிலைமைகளில் மேலும் மேம்பாடுகளை எதிர்பார்த்து, அடுத்து வருகின்ற மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் உயர்வான மட்டங்களில் காணப்பட்டன.

***உலகத் தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு***

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சுட்டெண் 2021 திசெம்பரில் 54.2 ஆக மாற்றமின்றிக் காணப்பட்டு 2021இன் இறுதியில் மேல் நோக்கிய போக்கினை நிலைநிறுத்தியது.

சீனாவின் தயாரித்தல் கொ.மு.சு 2021 நவெம்பரில் பதிவாகிய சுருக்கத்திலிருந்து திசெம்பரில் சிறிதளவு மேம்பட்டது. அதேவேளை சிங்கப்பூரின் தயாரித்தல், கொ.மு சுட்டெண்ணும், 2021 திசெம்பரில் அதிகரித்தது. எனினும், முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2021 திசெம்பரில் ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய வலயம், ஐக்கிய இராச்சியம், இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சு வீழ்ச்சியடைந்தது.

*மூலம்: மார்க்கிட்[1], 2022 சனவரி 18 அன்றுள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**பணிகள் துறை கொ.மு.சுட்டெண், திசெம்பரில் 62.4 சுட்டெண் பெறுமதியை அண்மித்து 2021இன் இறுதியில் வலிமைபெற்றது.** புதிய வியாபாரங்கள், தொழில் நடவடிக்கைகள், தொழில்நிலை, மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் துணைச் சுட்டெண்களில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்கள் மூலம் இவ்வதிகரிப்பு துணையளிக்கப்பட்டிருந்தது.

அநேகமான துணைத் துறைகளுக்கிடையில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகளுடன் புதிய வியாபாரங்கள், முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் திசெம்பரில் மேலும் அதிகரித்தன.

பொருளாதார நடவடிக்கைகள் இயல்புநிலைக்குத் திரும்புதல் மற்றும் பண்டிகை பருவகாலம் என்பவற்றுக்கு மத்தியில் ஏற்பட்ட கேள்வியில் தொடர்ச்சியான மேம்பாடுகளுக்கு இசைவாக பணிகள் துறைகளிலுள்ள நடவடிக்கைகள் திசெம்பரில் வலுவான வளர்ச்சியொன்றினை எடுத்துக்காட்டின. அதற்கமைய, நிதியியல் பணிகள், போக்குவரத்து, மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் அத்துடன் தனிப்பட்ட நடவடிக்கைகள் துணைத் துறைகளில் முக்கிய மேம்பாடுகள் அவதானிக்கப்பட்ட அநேகமான துணைத் துறைகள் முழுவதும் தொழில் நடவடிக்கைகள் மேம்பட்டன. அதேவேளை, பண்டிகைப் பருவகாலம் மற்றும் பன்னாட்டு சுற்றுலாப் பயணி வருகைகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி என்பவற்றுக்கு மத்தியில் தங்குமிடம், உணவு மற்றும் குடிபானத் துணைத் துறைகளிலுள்ள தொழில் நடவடிக்கைகளும் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன.

தமது தொழில் நடவடிக்கைகளில் ஏற்பட்ட சாதகமான அபிவிருத்திகள் காரணமாக அவர்களது தொழிற்படையினை கம்பனிகள் தொடர்ந்தும் விரிவுபடுத்தியமையினால் தொழில்நிலை திசெம்பரில் மேலும் அதிகரித்தது. அதேவேளை வழமைபோன்று ஊழியர்கள் பணிக்கு திரும்பியதற்கமைவாக நிலுவையிலுள்ள பணிகள் திசெம்பரில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது.

| மாறி | நவெ | திசெ | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | 62.1 | 62.4 | + | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| | | **<u>கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்</u>** | | |
| புதிய வியாபாரங்கள் | 65.7 | 67.8 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில் நடவடிக்கை | 71.7 | 72.8 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 52.0 | 53.0 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 47.3 | 45.7 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் | 74.0 | 72.8 | + | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

தளர்த்தப்பட்ட உலகளாவிய நோய்த்தொற்றுக் கட்டுப்பாடுகள் தொடரும் என்ற எதிர்பார்க்கைகளுக்கு மத்தியில் மேம்பட்ட எண்ணப்பாங்குகள் மூலம் துணையளிக்கப்பட்டு அடுத்த மூன்று மாதங்களுக்கான தொழில் நடவடிக்கைகள் திசெம்பரில் மேலும் மேம்பட்டன. எவ்வாறிருப்பினும், வழங்கல் தடங்கல்களிலிருந்து தோற்றம்பெற்ற பணவீக்க அழுத்தங்கள் மற்றும் புதிய கொவிட்-19 திரிபின் சாத்தியமான தாக்கம் என்பவற்றுக்கு மத்தியில் சவால்விடுக்கின்ற பொருளாதார சூழல் காரணமாக தொழில் எதிர்பார்க்கை தொடர்ந்தும் நிச்சயமற்றதாகவிருக்குமென சில பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர்.

**பணிகள்**
**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**62.4**

2021 நவெம்பருடன் ஒப்பிடுகையில் 0.3 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *உலகத் தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு*

உலகளாவிய பணிகள் கொ.மு.சு, 2021 நவெம்பரில் 55.6 இலிருந்து 2021 திசெம்பரில் 54.6 இற்கு வீழ்ச்சியடைந்து உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளில் மிதமான விரிவடைதலினை எடுத்துக்காட்டுகின்றது.

ஐக்கிய அமெரிக்கா, சீனா, இந்தியா, யப்பான் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2021 திசெம்பரில் அவற்றின் பணிகள் துறைகள் விரிவடைந்தமையினை எடுத்துக்காட்டின.

*(மூலம்: மார்க்கிட்[1], சனவரி 13, 2022 அன்றுள்ளவாறு)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.